பக்கங்கள் 14 + 3


மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 9 செவ்வாய்க்கிழமை 05.11.2024 | அதிர்வு 96

## மாமியாரின் வாயில் சூடு! மருமகன் தலைமறைவு!!

### வவுனியாவில் சம்பவம்

(கி.வசந்தன்)



வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் இளைஞர் ஒருவர் நாட்டுத் துப்பாக்கியைப்

02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# மருத்துவரின் மனைவி வெட்டிப் படுகொலை!

### திருகோணமலையில் கொடூரம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை தன்வந்திரி தனியார் வைத்தியசாலையின் உரிமையாளர் மருத்துவ நிபுணர் கனேகபாகுவின் மனைவி திருமதி ஏஞ்சலின் சுமித்ரா (வயது 64) இன்று காலை வைத்தியசாலையில் வைத்துக் கொடூரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.




# டெலிபோன் அணிக்குள் நிகழும் விருப்பு வாக்குப் போட்டி: தமிழ் வாக்காளர்கள் கட்டாயம் புரிந்துகொள்ள வேண்டும்!

### மனோ கணேசன் விசேட தெளிவூட்டல் அறிக்கை



“இது தேர்தல் பிரசாரத்தில் கடைசி வாரம். இன்று வெவ்வேறு கட்சிகள் மத்தியில் நடைபெறும் போட்டி முடிந்து விட்டது. அதற்குப் பதில், இன்று டெலிபோன் அணிக்குள் போட்டி இடும் பெரும்பான்மை இன வேட்பாளர்கள், தமிழ் வாக்காளர்களின் விருப்பு வாக்குகளைத் தேடி அலைகின்றார்கள். தமது தொகுதி சிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள், அங்கே தாம் இழந்த சிங்கள வாக்குகளை ஈடுசெய்ய, தமிழ் விருப்பு வாக்குகளைப் பெற்று கரையேற தவியாய் தவிக்கின்றார்கள். இந்த விருப்பு வாக்கு சூட்சுமத்தையும், தந்திரத்தையும் தமிழ் வாக்காளர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். டெலிபோன் சின்னத்துக்கு வாக்களித்து விட்டு, அந்தப் பட்டியலில், புரிந்துணர்வு உடன்படிக்கையுடன் கூட்டணி வேட்பாளர்களாகப் போட்டியிடும் எமது தமிழ் முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு தமது விருப்பு வாக்குகளை முன்னுரிமை அளித்து வழங்கும்படி தமிழ்

02 ▶

# ஊடகவியலாளர் தங்கவேல் சுமன் 'இளம் கலைஞர்' விருதுக்கு தெரிவு



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 2024 ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள இலக்கிய விழாவில் "இளம் கலைஞர்" விருதுக்கு ஊடகவியலாளர் தங்கவேல் சுமன் (எஸ்.ரி.சுமன்) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த மாதம் இறுதிப் பகுதியில் திருகோணமலையில் விருது விழா நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தங்கவேல் சுமன் சிறு வயது முதல் தற்போது வரை கூத்துக் கலையில் சிறப்பாக ஈடுபட்டு வருகின்றமையின் அடிப்படையில் இளம் கலைஞர் விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விளாவட்டவான் கிராமத்தைச் சொந்த இடமாகக் கொண்ட தங்கவேல் சுமன் யாழ்ப்பாணத்தில் கெப்பிட்டல் தொலைக்காட்சியின் ஊடகவியலாளராகத் தற்போது பணிபுரிகின்றார்.

# சிறைக் கைதிகளுடன் தகாத உறவு: இரு அதிகாரிகள் பணி இடைநீக்கம்



மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலருடன் தகாத உறவில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் இரண்டு அதிகாரிகள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலை அதிகாரி ஒருவர் மற்றும் சேமிப்புத் திணைக்களத்தின் பாதுகாவலர் ஆகியோரே பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் சிறைச்சாலை திணைக்களத்துக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அதிகாரிகள் இருவரும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மாமியாரின்...**

பயன்படுத்தி மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

நேற்று மேற்படி பெண்ணின் வீட்டுக்குச் சென்ற அவரது மருமகன் நாட்டுத் துப்பாக்கியால் பெண்ணின் வாய்ப் பகுதியில் சுட்டுள்ளார். இதனால் படுகாயமடைந்த பெண் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவத்தில் சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த 54 வயதான பெண்ணே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

தாக்குதலை மேற்கொண்ட நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈச்சங்குளம் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

**மருத்துவரின்...**

மரணமடைந்தவரின் சகோதரியின் கணவரான சுதர்சன் (வயது 59) என்பவரே இவரைக் கொலை செய்துள்ளார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

இன்று காலை கொலையுண்டவர் கொழும்பில் இருந்து வீடு திரும்பி அறைக்குள் சென்றபோதே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று அறிய முடிகின்றது.

சடலம் பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டு திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சட்ட வைத்திய பரிசோதனைக்காகக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தக் கொலை தொடர்பில் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கொலையாளி எனச் சந்தேகிக்கப்படுபவர் கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் இங்கிலாந்தில் இருந்து நிரந்தரமாக இலங்கை திரும்பி,சம்பவம் நடைபெற்ற திருகோணமலையில் உள்ள தமது வைத்தியசாலையில் தங்கியிருந்தார் என்றும், அதேநேரம் இவர் மன நிலை பாதிக்கப்பட்டவர் என்றும், அதற்குரிய சிகிச்சையைப் பெற்று தொடர்ந்து மாத்திரைகளை உட்கொண்டு வந்தார் என்றும் இவரது மூத்த சகோதரும் கொலையானவரின் கணவருமான பொது வைத்திய நிபுணர் மருத்துவர் கனேகபாகு தெரிவித்தார்.

கொலையாளியின் மனைவி மற்றும் மகள் இலண்டனில் வசிக்கின்றனர். கொலையானவரின் தங்கையே இவரது மனைவியாவார்.

மனநிலைப் பாதிப்பால் ஏற்படும் அதீத கோபத்தால் இந்தச் சம்பவம் நடந்திருக்கலாம் என வைத்தியசாலை ஊழியர்கள் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

கொலையானவர் நேற்று இரவு மூன்று மாதங்களின் பின் இலண்டனில் இருந்து இலங்கை திரும்பி அன்று இரவு கொழும்பிலிருந்து திருகோணமலை திரும்பி இருந்த நிலையில் இன்று காலை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

**டெலிபோன் அணிக்குள்...**

வாக்களர்களை நான் கோருகின்றேன்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள விசேட வாக்காளர் தெளிவூட்டல் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"கடைசியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், எமது வேட்பாளராக இருந்து சஜித் பிரேமதாஸவுக்கு கொழும்பு, கம்பஹா, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, பதுளை ஆகிய மாவட்டங்களில் வெற்றி வாக்குகளைப் பெற்றுக் கொடுத்தோம். நுவரெலியா மாவட்டத்தை வென்று கொடுத்தோம். இவை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் சாதனை வெற்றிகள்.

ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள வாக்காளர்களின் வாக்குகளைச் சஜித் பிரேமதாஸவுக்குப் பெற முடியாத பல பெரும்பான்மை இன அரசியல்வாதிகள், இன்று டெலிபோன் சின்ன வேட்பாளர்களாக, தமிழ் விருப்பு வாக்குகளைத் தேடி ஓடி வருகின்றார்கள். தமிழ் வாக்களர்கள் முன் தோன்றி, தமிழ் மக்கள் மீது திடீர் பாசம் கொண்டு பேசுகின்றார்கள். தமிழ் வாக்காளர்களைக் கண்டு பேசி கட்டி அணைக்க முயல்கின்றார்கள். எப்படியாவது கொஞ்சம் தமிழ் விருப்பு வாக்குகளை வாங்கி கரையேற முயல்கின்றார்கள். இது என்ன வகையில் நியாயம்?

தமிழ் மக்கள் துன்பப்படும்போது, துயரப்படும்போது, கண்ணீர் விடும்போது, சிக்கல்களில் சிக்கி தவிக்கும்போது, அது எமக்கு வலித்தது. தொடர்ந்தும் வலிக்கும். நாம்தாம் அங்கே இருந்தோம். நான்தான் எப்போதும் அங்கே இருந்தேன். இன்று தமிழ் விருப்பு வாக்குகளைத் தேடி வரும் எவரும் அங்கே இருக்கவில்லை.

நாளை அடுத்த நாடாளுமன்றத்தில், அநுர நிர்வாகத்துடன் தமிழ் மக்கள் சார்பாகக் கலந்துரையாடப் போவது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களும், எம்பிக்களும்தான். தமிழ்க் கட்சிகள்தான். வேறு எவரும் கிடையாது. வேறு எவருக்கும் எம் மீது அக்கறை கிடையாது. இதைத் தமிழ் மக்கள் மிக நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் வாக்காளர்கள் மீது திடீர் பாசம் காட்டும் இந்த வேட்பாளர்களின் விருப்பு வாக்கு எண்களுக்குத் தமிழ் வாக்காளர்கள் தமது விருப்பு வாக்குகளைத் தவறி போயும் கொடுத்து விட்டால், களத்தில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்கள் வெற்றி அடைய முடியாமல் போய் விடும். எமக்குப் பெரிய அளவில் சிங்கள வாக்குகள் கிடைக்கப் போவதில்லை. ஆனால், எமது விருப்பு வாக்குகளையும் வாங்கி, அதனுடன் கொஞ்சம் சிங்கள விருப்பு வாக்குகளையும் வாங்கிச் சேர்த்து, இவர்கள் விருப்பு வாக்குப் பட்டியல் வரிசையில் மேலே போய் விடுவார்கள். தமிழ் வாக்குகளை மாத்திரம் பெறுகின்ற நாம், கடைசியில் தெரிவு செய்யப்படும் எம்.பிக்களைத் தீர்மானிக்கும் விருப்பு வாக்குப் பட்டியல் வரிசையில் பின்தங்கி விடுவோம். ஆகவே, இது எமது விரல்களால், எமது கண்களையே குத்திக் கொள்வதாகும்.

ஆகவே, இந்த விருப்பு வாக்கு சூட்சுமத்தையும், தந்திரத்தையும் தமிழ் வாக்காளர்கள் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். டெலிபோன் சின்னத்துக்கு வாக்களித்து விட்டு, அந்தப் பட்டியலில் புரிந்துணர்வு உடன்படிக்கையுடன் கூட்டணி வேட்பாளர்களாகப் போட்டியிடும் எமது தமிழ் முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்குத்தான் தமது விருப்பு வாக்குகளை முன்னுரிமை அளித்து வழங்க வேண்டும்." – என்றுள்ளது.

# வாக்குறுதிகளை நிறைவேற்றாதவர்களை தேர்தலில் மக்கள் தோற்கடிக்க வேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் முருகேசு சந்திரகுமார் வலியுறுத்து










“சொந்த நிலத்தில் ஒருவர் வாழக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும். அதற்காக அரசியல் ரீதியாக உழைக்க வேண்டும். உண்மையில் அப்படிச் செய்வதே தேசிய பணியாகும். அதுவே தமிழ்த் தேசியத்தின் உயிர்நாடியாகும்.” – இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளருமான முருகேசு சந்திரகுமார்.

கிளிநொச்சி, உதயநகரில் நடந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு

உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், “தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். யாரைத் தெரிவு செய்வது என்று கேட்கின்றார்கள். நாங்கள் சொல்கின்றோம், மக்களாகிய நீங்கள் உங்களுக்கே வாக்களியுங்கள் என்று. ஆம், உங்களுக்காக என்றால், நீங்கள் வெற்றியடைவதற்காக உங்கள் வாக்குகளைப் பயன்படுத்திக்கொள் ளுங்கள் என்றே அர்த்தமாகும்.

கடந்த காலத்தில் நீங்கள் தெளிவாகச் சிந்திக்க மறந்ததால்தான் அல்லது நம் பிக்கையின் அடிப்படையில் வாக்களித்த படியால்தான் தவறானவர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ள முடிந்தது.

தவறானவர்களின் கைகளில் அரசி யல் அதிகாரம் சென்றால், அது தவ றான விளைவுகளையே உருவாக்கும். அதுதான் இன்று நடந்திருக்கின்றது.

இப்போது தென்னிலங்கை மக்கள் – சிங்கள மக்கள் அந்தத் தவறைத் திருத் திக் கொள்வதற்குத் தயாராகி விட்டார் கள். அதனால் அங்கே புதியதொரு அரசியல் சூழல் உருவாகியிருக்கின்றது. ஊழலற்ற, மக்கள் மீது அக்கறையுள்ள அரசியல்வாதிகளை மக்கள் வெற்றிபெற வைக்கும் நிலை உருவாகியுள்ளது.

அதேபோன்று வடக்கிலும் கிழக்கி லும் மாற்றம் நிகழ வேண்டும். மக்க ளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறை வேற்றாதவர்களை மக்கள் தோற்கடிக்க வேண்டும்.

சமூக வளர்ச்சிக்குப் பங்களிக்காத வர்களை மக்கள் விரட்ட வேண்டும். மக்க ளுடைய போராட்டத்தையும் போராளிக ளின் தியாகங்களையும் வைத்து அரசி யல் பிழைப்பு நடத்துவோரைக் கலைக்க வேண்டும். மக்களுடைய பிரச்சினைக ளுக்குத் தீர்வைத் தர முடியாதவர்கள் எதற்காக? மக்களுடைய தேவைகள் என்ன என்று தெரியாதவர்கள் எதற்காக?

நாம் கடந்த காலத்தில் போரினால் அழிந்து போயிருந்த கிளிநொச்சியைக் கட்டியெழுப்பியிருக்கின்றோம். மக்களின் மனதிலே நிலைத்திருக்கக் கூடிய பல பணிகளை ஆற்றியிருக்கின்றோம். இன்று வடக்கிலே – வவுனியாவுக்கு அப்பால் உள்ள ஐந்து மாவட்டங்களி லும் அதிகூடியோர் வேலை செய்யும் ஒரு தொழிற்சாலை கிளிநொச்சியில் மட்டும்தான் உள்ளது. அந்தத் தொழிற் சாலையிலே 6 ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள். ஆம், 6 ஆயிரம் பேர் வேலை செய்யக் கூடிய வேறு ஒரு தொழிற் சாலையை வேறு எங்காவது யாராவது காட்ட முடியுமா?

இப்போது ஆண்டுக்கொரு தொழிற் சாலையை உருவாக்குவதற்கு முயற்சித் திருந்தால், தமிழ் மக்களின் பொருளாதாரம் முன்னேற்றம் கண்டிருக்கும். எங்கள் நிலத்தை விட்டு மக்கள் வெளியேறிச் செல்லும் நிலை வந்திருக்காது. மக்கள் தொகை குறைந்தால் எங்களுடைய பிரதி நிதித்துவம் குறைந்து விடும். அதுதான் நடக்கின்றது.

அதை மாற்றியமைக்கக் கூடியவர் கள் இங்கில்லை. நாங்கள் மக்களை முன்னேற்ற முயற்சிக்கிறோம். எங்கள் மண்ணை வளப்படுத்துவதற்குப் பாடு படுகின்றோம். சொந்த நிலத்தில் ஒருவர் வாழக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும். உண்மையில் அப்படிச் செய்வதே தேசிய பணியாகும். அதுவே தமிழ்த் தேசியத்தின் உயிர்நாடியைப் பாதுகாப்பதாக அமையும்.

எமது மண்ணில் போருக்குப் பிந்திய அரசியலை யாரும் செய்யவில்லை. அதை நாம் மட்டுமே செய்து வருகின் றோம்.

ஆகவேதான் சொல்கின்றோம், எமது வழி தனியான வழி. அது ஒரு புதிய வழி. மக்களுக்கான வழி. அதுவே சர்வதேச சமூகம் அங்கீகரிக்கின்ற வழி என அந்த வழியைத் தெரிவு செய்வதும் அதற்கு ஆதரவளிப்பதுமே மக்களுடைய வெற் றிக்கு உதவும். அதுவே மக்களுக்கான வெற்றியாகும்.

ஆகவேதான் மக்கள் வெற்றிய டைய வேண்டும் என்றால், மக்களுடைய தேவைகளை உணர்ந்தவர்கள் வெற்றி யடைய வேண்டும் என்று வலியுறுத்து கின்றோம். இந்தத் தேர்தலில் புதிய மாற்றங்களைத் தமிழ் மக்களும் செய்து காட்ட வேண்டும்.

நாம் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஏன் போட்டியிடுகின்றோம் என்றால், தமிழ் மக்களுடைய பிரச்சி னையை ஏற்றுள்ள, தமிழ் மக்களுக் குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று சொல்லுகின்ற ஒரே தரப்பாக ஐக்கிய மக்கள் சக்தியே உள்ளது. ஆகவேதான் நாமும் மலையகக் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளுமாக இணைந்து தமிழ்பேசும் சமூகங்களாக எமது உரிமைகளைக் கேட்கின்றோம்.

இப்படி ஒன்றிணைந்து நின்று குரல் கொடுப்பதும் போராடுவதுமே இன்றைய சூழலில் வெற்றியைத் தரும்.

ஆகவேதான் நாம் யதார்த்தமான, அறிவுபூர்வமான அரசியலை முன்னெ டுக்கின்றோம். அது காலத்தின் கட்டாய மாகும. காலப்பொருத்தமற்ற அரசி யலை யாராவது செய்தால் அதனால் மக்களுக்குத்தான் தீமைகள். மக்களுக் குப் பாதிப்பை ஏற்படுத்தும் அரசியலை யாரும் செய்யக் கூடாது. அது மாபெரும் குற்றமாகும்.” – என்றார்.




# யாழில் வன்முறைக் கும்பல் அட்டகாசம்!

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை பகுதியில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு அத்துமீறி நுழைந்த வன்முறைக் கும்பல், வீட்டில் இருந்த சொத்துக்களுக்கு சேதம் விளைவித்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த 5 இற்கும் அதிகமானவர்களைக் கொண்ட வன்முறைக் கும்பல், வீட்டினுள் அத்துமீறி நுழைந்து வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், சைக்கிள்கள் என்பவற்றைச் சேதப்படுத்தியதுடன், ஜன்னல் கண்ணாடிகள், மீன் தொட்டி, தையல் இயந்திரம் என்பவற்றையும் அடித்து உடைத்துச் சேதமாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





# கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் விருதுபெறும் கலைஞர்களின் விவரம்

( வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான இலக்கிய விழாவில் விருது பெறும் கலைஞர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் நேற்று திங்கட்கிழமை மாலை இதனை வெளியிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 2024 ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள இலக்கிய விழாவில் விருதுகள் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள கலைஞர்களின் விவரம் வருமாறு,

வித்தகர் விருது – ஜனாப். ஹயாத்து முஹமது ஹலால்தீன் (இலக்கியம்) – திருகோணமலை, திருமதி. பரமேஸ்வரி இளங்கோ (இலக்கியம்) – மட்டக்களப்பு, ஜனாப். உதுமா லெப்பை முகம்மது பௌஸ் (இலக்கியம்) – மட்டக்களப்பு, ஜெயக்கொடி டேவிட் (இலக்கியம்) – அம்பாறை, பி.டபிள்யூ. நந்தினி (இலக்கியம்) – அம்பாறை, பி.டி. கருணாரட்ண (நாட்டாரியல்) – அம்பாறை, ஜனாப். உதுமாலெப்பை ஆதம்பாவா (நாட்டாரியல்) – அம்பாறை, பி.டி.ஜி. பந்துல குமார (ஆற்றுகை) – அம்பாறை, ஜனாப். சுபைர் ரபீக் (ஊடகம்) – அம்பாறை, திருமதி. சுலோஜனா தேவராஜன் (ஆற்றுகை) – திருகோணமலை, திருமதி. இந்திராகாந்தி ராமலிங்கம் (ஆற்றுகை) – திருகோணமலை, தேவநாயகம் அலோசியஸ் (ஆற்றுகை) – மட்டக்களப்பு, கலாநிதி முத்து ராஜா பிரேம்ராஜ் ரவிச்சந்திரா (பல்துறை) – மட்டக்களப்பு, திருமதி அல்பேர்ட் சிவகாமிதேவி (பல்துறை) – அம்பாறை, ஜனாப். அச்சிமுஹமது தாஜீன் (பல்துறை) – அம்பாறை.

இளங்கலைஞர் விருது– ஜனாப். நஸார் முகம்மது இஃஜாஸ் (இலக்கியம்) – திருகோணமலை , ஜனாபா. றுஸீட் பாத்திமா முஜாமலா (இலக்கியம்) – அம்பாறை, ஆள. நதீகா போபிட்டிய (இலக்கியம்) – அம்பாறை, ஏ. நில்மினி சமரதுங்க (இலக்கியம்) – அம்பாறை, ஜனாபா. முஹம்மது ஹனிபா ஜிப்ரியா (நாட்டாரியல்) – மட்டக்களப்பு, தங்கவேல் சுமன் (நாட்டாரியல்) – மட்டக்களப்பு, ஜனாப். அப்துல் றாசிக் அஹமட் நபாயிஸ் (ஊடகம்) – அம்பாறை, வேதாரணியம் ஹோகுலரமணன் (நுண்கலை) – மட்டக்களப்பு, செல்வி. கேதாரிணி சிவாநந்தராஜா (ஆற்றுகை) – திருகோணமலை, ராஜேந்திரம் தனஞ்சயன் (ஆற்றுகை) – மட்டக்களப்பு, திருமதி ஆர். சி. தரங்கனி (ஆற்றுகை) – அம்பாறை, கதிரேசன்பிள்ளை சந்திரமோகன் (ஆற்றுகை) – மட்டக்களப்பு, ஆர் எஸ்.பள்ளேகெதர (ஆற்றுகை) – அம்பாறை, சண்முகம் பிள்ளை செல்வபிரகாஸ் (ஆற்றுகை) – மட்டக்களப்பு, செல்வி. சுந்தரலிங்கம் கிஷானி (ஆற்றுகை) – மட்டக்களப்பு, எச் எம். மாலனி ஹேரத் (ஆற்றுகை) – அம்பாறை, ஜனாப். ஜுனைட் முஹம்மது இஹ்சான் (பல்துறை) – திருகோணமலை, ஜனாப். முஹம்மது முஸ்தபா ஹிஜாஸ் அஹமட் (பல்துறை) – அம்பாறை.

சிறந்த நூற் பரிசு (சாஹித்ய விருது) – புதுக்கவிதை – “புழுதி” – சிவானந்தராஜா கதன் (காரையன் கதன்) – அம்பாறை, புலமைத்துவ ஆய்வு – “மட்டக்களப்பு மந்திர சடங்குகள்” – அருளானந்தம் சுதர்சன் – அம்பாறை, மரபுக் கவிதை “நிலவைக் கேட்டுப்பார்” – ஜனாப். முஹம்மது சொலிஹ் அப்துல் ஹை – மட்டக்களப்பு, நாவல் – “ஆறாத வடு” – முருகையா சதீஸ் – திருகோணமலை, வரலாறு – “வரலாற்று சிறப்பு மிக்க அகஸ்தியர் ஸ்தாபனம்” – தவராஜா தனுஷ்கர் – திருமலை, சிறுகதை தைலாப் பெட்டி’ – ஜனாப். அலியார் பீர் முகம்மது – அம்பாறை, சிறுவர் இலக்கியம் – “வண்டில் மாமா” – ஜனாப். அ. மீரா முகைதீன் – திருகோணமலை, நாடகம் – கூத்து – “வீதிநாடகங்கள் பனுவலும் ஆற்றுகையும் – ரு. சுந்தரலிங்கம் சந்திரகுமார் – மட்டக்களப்பு, இலக்கிய சஞ்சிகை – “அவரி” – திருமதி. சித்தி மஷ்ஃ – சுஹ்றுதீன் – அம்பாறை, நாட்டார் இலக்கியம் – “இளவேனிற் காலமும் கானங்களும்” – ஜனாப் ஐ.ஏ.ஹஸன்ஜி – திருகோணமலை, அ. சமூக விஞ்ஞானம் (ஆயுள் சுவதம்) – “நலன் தரும் மருத்துவம்” – ஜனாப்.முஹம்மது இஸ்மாயில் முஹம்மது பைஸல் – அம்பாறை, சமூக விஞ்ஞானம் (ஆன்மீகம்) – “இந்துமத மரணக்கிரியைகளில் சவ அடக்கம் ஒரு பார்வை” – அருளம்பலம் குகராஜா – திருகோணமலை, சமூக விஞ்ஞானம் (ஜோதிடம்) – “மனையடி சாஸ்த்திரம்” – கணபதிப்பிள்ணள விஸ்வலிங்கம் – மட்டக்களப்பு.



# மன்னார் மாவட்டம் தொடர்ந்து அவிவிருத்தியில் பின்னடைவே!

## மன்னார் ஆயர் பிரதமரிடம் சுட்டிக்காட்டு

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டம் பல துறைகளிலும் அபிருவிருத்தியில் பின் தங்கிக் காணப்படுகிறது. இதனால் மன்னார் நோக்கியும் மிக கவனம் செலுத்தும்படி மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தன்னை சந்தித்த பிரதமரிடம் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக தனது கட்சியான தேசிய மக்கள் சக்தி தேர்தல் பரப்புரைக்காக நேற்று திங்கள்கிழமை (04) மன்னாருக்கு வருகை தந்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை மரியாதையின் நிமித்தம் ஆயர் இல்லத்தில் சந்தித்து ஒரு சில மணி நேரம் உரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்து நாயகம் அடிகளார் , மடு பரிபாலகர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார், குடும்ப பொது நிலையினர் பணியக இயக்குனர் அருட்பணி இ.அகஸ்ரின் புஸ்பராஜ் அடிகளார் , முன்னாள் குரு முதல்வர் ஏ.விக்ரர் சோசை அடிகளார் மூத்த அருட்பணியாளர் எஸ்.எமிலியானுஸ்பிள்ளை உட்பட ஆயர் இல்ல முக்கிய அருட்பணியாளர்களும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆயர் மேற்படிக் கோரிக்



கையை விடுத்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

மன்னார் மறைமாவட்டத்துக்கு சொந்தமான மற்றும் பொது மக்களின் காணிகள் மற்றும் வயல் நிலங்களுக்கு உறுதிகள் இருக்கின்றபோதும் வன இலாக மற்றும் தொல்பொருள் திணைக் களங்கள் அடாத்தாக அபகரித்து வரப்பகின்றன.

மன்னார் தீவில் கனியவள மணல் அகழ்வு மற்றும் காற்றாலை அமைப்பதனால் இப்பகுதி மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

எந்த அரசு ஆட்சிக்கு வருகின்ற போதும் மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தப்படுவதில்லை.

குறிப்பாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அபிவிருத்தியானது மந்த கதியிலேயே காணப்படுகிறது. பிற மாவட்டங்களை நம்பியே இங்குள்ள நோயாளர்கள் காணப்படுகின்றனர் என்றும் தெரிவித்தார்.மன்னார் மாவட்டத்தின் பல தேவை களையும் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசியங்களையும் எடுத்து ரைத்தார்.

ஆயர் மற்றும் அவரின் குழுக்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளைக் கேட்டறிந்த பிரதமர், இந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்வார் என்று தெரிவித்திருந்தார்.

பிரதமர், ஆயர் இல்லம் வந்திருந்த பொழுது ஞாபகர்த்தமாக மருத மடு அன்னையின் திருச்சுரூபமும் பிரதமருக்கு ஆயரால் கையளிக்கப்பட்டது.



நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சுற்றுலாத் துறை நெருக்கடி

இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அல்லது தங்குவதற்கு வீசா தேவையில்லாத ஏழு நாடுகளிலிருந்து இங்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பற்றிய தகவல்களைக் கண்டறிவதில் அதிகாரிகள் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

நாட்டுக்குள் வருகை தந்த இத்தகைய பயணிகள் நாட்டை விட்டுத் திரும்பிச் சென்று விட்டார்களா அல்லது தொடர்ந்து தங்கி இருக்கின்றார்களா என்பதைக் கூட உறுதிப்படுத்த முடியாத நிலையில் அதிகாரிகள் உள்ளனர்.

நாட்டிற்குள் அதிக எண்ணிக்கையில் வரும் சுற்றுலாப் பயணிகள் அவர்கள் விடுமுறை முடிந்து திரும்புகிறார்களா அல்லது வணிக நோக்கத்தில் அல்லது பிற நடவடிக்கைகளில் ஈடுபட்டுத் தொடர்ந்து தங்கியிருக்கின்றார்களா என்பதைக் கண்டறிவது, குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளுக்கு தற்போது சவாலான பணியாக மாறியுள்ளது.

விசா இன்றி சுற்றுலாப் பயணிகளை அனுப்பக்கூடிய ஏழு நாடுகளை இலங்கை அங்கீகரித்துள்ளதாகவும், இதனால் அந்தத் தேசங்களின் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் நுழையும் போது விமான நிலையங்களில் உள்ள குடிவரவு கவுண்டர்களில் உள்ள அமைப்பில் அவர்களின் விவரங்களை உள்வாங்க முடியாது என்றும் மூத்த குடிவரவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ஆம் திகதி சுற்றுலாத் துறையை மீளக் கட்டியெழுப்புவதற்கான அமைச்சரவையின் தீர்மானத்தை அடுத்து, இந்தியா, சீனா, மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, ஜப்பான் மற்றும் ரஷ்யா உள்ளிட்ட ஏழு நாடுகளின் பிரஜைகளை விசா பெறாமல் நுழைவதற்கு இலங்கை அங்கீகரித்துள்ளது.

அறுகம்பேயில் உல்லாசப் பயணிகளுக்கு கடந்த வாரம் அமெரிக்கத் தூதரகத்தால் பயண ஆலோசனை வழங்கப்பட்டபோதுதான் இவ்விடயத்தில் சிக்கல் புரிந்தது. அச்சமயம் எத்தனை சுற்றுலாப் பயணிகள் அப்பகுதியிலும் பிற இடங்களிலும் எஞ்சியுள்ளனர் என்பதைத் திட்டவட்டமாக அறிய முடியாமல் குடிவரவு அதிகாரிகள் மற்றும் உள்விவகார அதிகாரிகள் தடுமாறினர் என்று கூறப்படுகின்றது.

அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணைகள் மற்றும் ஆய்வுகளில் இஸ்ரேல் மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளிலிருந்தும் கணிசமான எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் தங்கி குடிவரவுச் சட்டங்களை மீறிப் பல்வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர் என்பது அப்போது கண்டறியப்பட்டதாம்.

விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் பயணிகளின் இறங்கும் அட்டை அல்லது வருகை அட்டையை ரத்து செய்வதற்கு முந்தைய குடிவரவு, குடியகல்வுப் பிரிவுத் தலைவர் கடந்த மே முதலாம் திகதி முதல் மேற்கொண்ட நடவடிக்கையால், வரும் சுற்றுலாப் பயணிகளைப் பற்றிய தகவல்களை சேகரிக்கவும் சேமிக்கவும் இருந்த வாய்ப்பு முடக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக சுற்றுலாப் பயணச் சபையின் அங்கீகாரம் பெற்ற நாட்டிலுள்ள அனைத்து ஹோட்டல்களையும் திணைக்களத்துடன் இணைத்து உல்லாசப் பயணிகளின் இயக்கத்தைக் கண்காணிக்கலாமா என்று திட்டமிடப்படுவதாகக் கூறப்படுகின்றது.

ஒழுங்காக இருந்த நடைமுறைகளைக் கண்மூடித்தனமான முறைகளில் நீக்கி விட்டு இப்போது குழம்பி நிற்கின்றார்கள் நிர்வாகிகள்.



# கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிப்போருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பழவகை!




யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால், கந்தசஷ்டி விரதத்தில் உபவாசம் அனுஷ்டிப்போருக்கு இரவு தீர்த்தம் கரைப்பதற்கான பழ வகைகள் வழங்கிவைக்கப்பட்டன.

வருடாவருடம் சந்நிதியான் ஆச்சிரமத்தால் சந்நிதி முருகன் கோவிலில் கந்தசஷ்டி உப வாச விரதம் அனுஷ்டிப்போருக்கு பழ வகைகள் வழங்கப்பட்டு வருவது வழமை.

அதன் அடிப்படையில் இந்த முறையும் தினமும் நூற்றுக் கணக்கான உபவாச விரதம் அனுஷ்டிப்போருக்கு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் பழங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.





EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA




# சங்கு சின்னத்தின் வேட்பாளரின் அலுவலகம் ஆலையடிவேம்பில்

(வி.ரி.சகாதேவராஜா)

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி சார்பாக சங்கு சின்னத்தில் இலக்கம் 10 இல் போட்டியிடும் முன்னாள் மாகாணசபை உறுப்பினரும், முன்னாள் நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளரும் வேட்பாளருமான சோமசுந்தரம் புஸ்பராசாவின் தேர்தல் அலுவலகம் ஆலையடிவேம்பில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.




இதில் ஆலையடிவேம்பு பாற்பண்ணையாளர்கள், பொதுமக்கள், புத்திஜீவிகள், இளைஞர்கள் என ஆயிரக் கணக்கானவர்கள் கலந்துகொண்டு வேட்பாளர் புஸ்பராசாவுக்கு வரவேற்பையும் ஆதரவையும் வழங்கினர்.

கலந்து கொண்ட பொதுமக்களால், அம்பாறை மாவட்டத்தில் பலராலும் அறியப்பட்ட இவர், தனக்கு பதவிகள் இல்லாதபோதும் இனவாத முஸ்லிம் அரசியல்வாதிகளால் சுரண்டப்படும் பல தமிழர் வளங்களை விளம்பரங்கள் இல்லாது காப்பாற்றிய ஆளுமைக்கு தான் எமது ஆதரவு என கோஷம் எழுப்பியிருந்தனர்.

உதாரணமாக சுமார் 4800 ஏக்கர் வட்டமடு மேச்சல்தரையை மீட்டுக் கொடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்க தாகும். சக வேட்பாளர் சு.தவமணியும் பங்குபற்றியிருந்தார்.

# வாக்குகளை வீணடிக்காமல் உண்மைக்கு வாக்களியுங்கள்

## வேட்பாளர் சலீம் தெரிவிப்பு

(எம். எப். றிபாஸ்.)

மக்கள் செல்வாக்கை இழந்து மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் இருக்கும் கட்சிகளுக்கு வாக்களித்து அவ்வாறான வாக்குகளை வீணடித்துவிடாமல் நேர்மைக்கும், உண்மைக்கும் அரசியல் செய்து மக்கள் நம்பிக்கையை பெற்றவர்களுக்கு தமது வாக்குகளை அளிப்பதற்கு வாக்காளர்கள் முன்வர வேண்டும்.




இவ்வாறு திகாமடுல்ல மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் மூன்றாம் இலக்கத்தில் போட்டியிடும் வேட்பாளரும், அரச நிர்வாக முன்னாள் அதிகாரியுமான ஏ.எல்.எம். சலீம் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேசத்தில் வேட்பாளர் சலீமை ஆதரித்து இடம்பெற்ற பெண்கள் மகாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில்,

வெறுமனே நாடாளுமன்ற கதிரைகளைச் சூடாக்கி விட்டு மக்களுக்கு ஆக்கபூர்வமான எதையும் செய்யாத கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களித்து நமக்கு நாமே சேறு பூசிக் கொள்ளும் நிலையிலிருந்து நாம் விடுபட வேண்டும்.


அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரசுக்கான மக்கள் செல்வாக்கு பெரிதும் அதிகரித்து வருகிறது.

சாய்ந்தமருதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக நான் போட்டியிடுகின்றேன். இந்த மாவட்டத்தில் எமது கட்சிக்கு வாக்களிக்கும் போது அந்தக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களில் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் பெறுகின்ற வேட்பாளருக்கு ஒரு உறுப்பினராக தெரிவாகின்ற வாய்ப்பு இருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் இரண்டு ஆசனங்கள் பெறக்கூடிய வாய்ப்பு அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு அதிகரித்துச் செல்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தப் பிரதேச மக்கள் தங்களது வாக்குகளை சிந்தித்து வழங்குவார்களாக இருந்தால் தமக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்தும் மக்கள் விருப்பங்களுடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆதரவு பெருகி வருகின்ற இந்த நிலையில் சாய்ந்தமருது பிரதேச மக்களும் இதனோடு இணைந்து நமக்குச் சாத்தியமான நாடாளுமன்ற உறுப்பினரை அடைந்து கொள்வதற்கு தங்களது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும்.

சிறந்த தலைமைத்துவத்தின் வழிகாட்டலின் கீழ் திறமையான நேர்மையான வேட்பாளர்கள் தேர்தலில் களம் இறக்கப்பட்டிருக்கின்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வெற்றியை உறுதி செய்வதோடு மூன்றாம் இலக்க வேட்பாளரான எனக்கும் மயில் சின்னத்துக்கும் வாக்களித்து நமக்கான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்து கொள்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.- என்றார்.



# காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வேகமாக உயர்வு

(மஸ்கெலியா )

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் பெய்து வரும் கடும் மழை காரணமாக காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வேகமாக அதிகரித்து வருகின்றது.

இது தொடர்பில் நீர்த்தேக்கத்துக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, இந்த நாட்களில் மாலை வேளையில் பெய்து வரும் அடை மழை காரணமாக காசல்ரீ நீர்த்தேக் கத்தின் நீர்மட்டம் வேகமாக அதிகரித்து வருகிறது.

இந்த நிலை காரணமாக நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 8 அடிக்கு கீழ் நிரம்பி காணப்படுகிறது.நீர்மின்சார உற்பத்திக்காக இந்த நீர்த்தேக்கத்தின் நீரை அதிகபட்சமாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரி மேலும் தெரிவித்தார்.






# சமூக சிற்பிகள் அமைப்பின் அம்பாறைக் கருத்துக் களம்!

(வி.ரி.சகாதேவராஜா)

சமூக சிற்பிகள் அமைப்பின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட கட்சிகளது வேட்பாளர்களின் கருத்துக்களம் இன்று (5) செவ்வாய்க்கிழமை திருக்கோவில் விநாயகபுரத்தில் நடைபெற்றது.

சமூக சிற்பிகளின் தலைவி நடராஜா நிஷாந்தினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அமைப்பின் சட்டத்தரணி திருமதி மனோகரன் சுதர்ஷினி நிகழ்வின் நோக்கம் பற்றி விளக்கினார்.

மக்களுடன் கலந்துரையாட அரசியல் கட்சிகள் சார்பில் எட்டு வேட்பாளர்கள் அழைக்கப்பட்டிருந்தும் ஐந்து வேட்பாளர்களே மக்களுக்கு மதிப்பளித்து சமுகமளித்திருந்தனர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் வேட்பாளர் கி.ஜெயசிறில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் தவமணி சுப்பிரமணியம், புதிய ஜனநாயக முன்னணி வேட்பாளர் வெ.ஜெயச்சந்திரன், ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் எஸ்.நிரோஸன், ஈழமக்கள் ஜனநாயக கட்சி வேட்பாளர் செ.இராசையா ஆகிய வேட்பாளர்கள் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர்.

மக்கள் தங்கள் கேள்விகளை கேட்டனர். அதற்கு வேட்பாளர்கள் பதிலளித்தனர்.

இயற்கை வளங்கள் சூறையாடல், காணி சுவீகரிப்பு, அரச காணி பகிர்ந்தளிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், வெள்ளப் பெருக்கு முதலான ஏலவே ஒதுக்கப்பட்ட கேள்விகளை கேட்டனர்.

இலக்க அடிப்படையில் வேட்பாளர்கள் பதிலளித்தனர். தேர்தல் முடிந்த பின்னர் வெற்றியீட்டிய வேட்பாளரை அழைத்து இன்று வழங்கிய பதிலை நடைமுறைப் படுத்தல் தொடர்பாக வினவப்படும் என்று இணைப்பாளர் நிஷாந்தினி இதன்போது தெரிவித்தார்.







# பல்துறை சார் மானிய உதவிகளுக்கு கிழக்குக்கு ரூ. 2.35 பில்லியன் நிதி!

## இந்திய உயரிஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு!!

(அபு அலா )

கிழக்கு மாகாணத்தின் பல்துறை சார் மானிய உதவிகளுக்கு 2.35 பில்லியன் இலங்கை ரூபாவை ஒதுக்க இந்தியா உறுதியளித்துள்ளது என்று இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

திருகோணமலை திருக்கடலூர் ஆழ்கடல் மீனவர்கள் வர்த்தக சங்க கட்டடத்தில் நேற்று முன்தினம் (03) மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அதன் தலைவர் ரவிகுமார் தலைமையில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு இந்தியா வழங்கிய பெரிய அபிவிருத்தி ஒத்துழைப்பு உதவிகளின் வரிசையில், இந்த நாட்டின் மீனவ சமூகத்தை ஆதரிப்பதும், ஊக்குவிப்பதும், அவர்களின் தொழிலை மேம்படுத்துவதற்கான முயற்சியை வழங்கி வைப்பதற்கும் எங்கள் நாடு முக்கிய இடத்தில் உள்ளது.

2009-10 ஆம் ஆண்டு உள்நாட்டு ஆயுத மோதலை அடுத்து, உள்நாட்டில் இடம்பெயர்ந்த மீனவர்கள் உள்ளிட்ட மீனவ குடும்பங்களுக்கு கடந்த காலங்களில் மீன்பிடி உபகரணங்களை வழங்கிய பல நிகழ்வுகளும் இருப்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கிழக்கு மாகாணத்தின் பல்துறை சார் மானிய உதவிகளுக்கென, சுமார் 2.35 பில்லியன் இலங்கை ரூபாய்களை ஒதுக்க இந்தியா உறுதியளித்துள்ளது. மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு 33 திட்டங்களுக்கான, கட்டமைப்புத் திட்டங்கள் உறுதி செய்யப்படவுள்ளன. இவற்றில், 7 மீன்பிடித் திட்டங்களை கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் மேற்கொண்டு அவர்களுக்காக மீன்பிடி உபகரணங்களை வழங்குவது மட்டுமல்லாமல், நன்னீர் அலங்கார மீன் வளர்ப்பு, கடற்பாசி கூண்டு வளர்ப்பு, திலாப்பியா குளத்து மீன் வளர்ப்பு மற்றும் பருவகால தொட்டி மேம்பாடு போன்றவை உள்ளடங்கியுள்ளது.

கடின உழைப்பாளிகளான திருகோணமலை மீனவர்களுக்கு, படகுகளுக்கான வெளியிணைப்பு இயந்திரம், பிடித்த மீன்களை பாதுகாக்க கூடிய உறைவிக்கும் குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் உயிர்காப்பு அங்கிகளை இன்று வழங்கியுள்ளேன். இவை உங்கள் அன்றாட நடவடிக்கைகளின் பாதுகாப்பு மற்றும் செயல்திறன் போன்றவற்றை மேம்படுத்த உதவ அத்தியாவசியமான கருவிகளாகும்.

நீங்கள் பிடித்த மீன்களை தரம் கெடாது பேணுவதற்காக ஆழமான உறைவிப்பான்களை பயன்படுத்தி பாதுகாப்பாக வைத்துக்கொண்டு அதை உறுதி செய்யும் அதேவேளையில், உங்கள் வருமானத்தைப் பெருக்குவதற் கும் பங்களிக்கும் என நான் நம்பு கிறேன்.

கடலில் சிக்கித்தவிக்கும் அல்லது விபத்துகளை சந்திக்கும் மீனவர்களையும் மற்றும் அவர்களது படகுகளை பாதுகாப்பாக மீட்பதற்கு அதிக வலு கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் உயிர்காப்பு அங்கிகள் மிக முக்கிய பங்கை வகிக்கும்.

இந்தியாவும் இலங்கையும் நமது கரையோரங்களை இணைக்கும் வரலாறு, கலாச்சாரம் மற்றும் இந்தியப் பெருங்கடலில் வேரூன்றிய ஆழமான பிணைப்பைப் பகிர்ந்து கொள்கின்றன.

கடந்த வாரம், இந்தியா - இலங்கை மீன்வளத்துறையின் கூட்டுப் பணிக்குழுவின் 6 ஆவது கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. அதில் இரு தரப்பினரும் மீனவர்கள் தொடர்பான அனைத்து பிரச்சினைகளையும் விரிவாக ஆய்வு செய்தனர்.

இலங்கையில் மீன்பிடித் தொழிலின் முக்கியத்துவத்தையும், மீனவர்களாகிய நீங்கள், இயற்கையாலும், சந்தைப்படுத்துவதில் உள்ள விடயங்களாலும், நவீன உபகரணங்களை அணுகுவதன் மூலமும் எதிர்கொள்ளும் சவால்களையும் இந்தியாவில் உள்ள நாங்கள் புரிந்து கொள்கிறோம்.

இந்த நட்புறவு மற்றும் கூட்டாண்மையின் உணர்வில்தான் இந்தியா இலங்கைக்குத் தேவையான நேரங்களில் தொடர்ந்து துணை நின்றது. இனியும் நிற்கும். இன்றைய உதவி அந்த திசையில் பயணிப்பதற்கான மற்றொரு படியாகும்.

இந்த முயற்சி பொருளுதவி வழங்குவது மட்டுமல்ல திருகோணமலை மீனவ சமூகத்தின் நிலையான எதிர்கால சமூகங்களை வலுப்படுத்துவதும், அதற்கான முதலீடுகளை செய்வதுமாகும். வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கும் எங்களின் பகிரப்பட்ட அர்ப்பணிப்புக்கு இது ஒரு சான்றாகும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பங்காளித்துவத்தையும் உறவையும் தொடர்ந்து வலுப்படுத்துவோம். நமது பகிரப்பட்ட எதிர்காலம் செழிப்பு, அமைதி மற்றும் முன்னேற்றம் கொண்டதாக இருப்பதை உறுதிசெய்ய எமது அரசுகள், எமது மக்கள் மற்றும் எமது சமூகங்கள் தொடர்ந்து இணைந்து செயல்படும்.

மேலும் இந்த உதவி உங்கள் வாழ்வில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன். நீங்கள் இந்த பிராந்தியத்தின் முதுகெலும்பு. உங்கள் வலைகள் எப்போதும் நிரம்பியிருக்கவும், கடலுக்கு செல்லும் எமது மீனவ உறவுகள் அனைவரும் பாதுகாப்பாக கரைக்குத் திரும்பவும் வேண்டி இறைவனை பிரார்த்திக்கின்றேன்.- என்றார்.







# ஹட்டன் நகரில் குவிந்துள்ள குப்பைகளால் பெரும் சிரமம்

(மஸ்கெலியா )

ஹட்டன் நகரில் பெருமளவில் குப்பைகள் குவிந்துள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

தீபாவளி பண்டிகைக் காலத்தில் தற்காலிக வியாபாரிகளால் கைவிடப்பட்ட பொலித்தீன் கழிவுகளால் ஹட்டன் நகரின் சுற்றாடலுக்கு பாரிய பாதிப்பும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இந்த தற்காலிக வியாபாரிகள் தங்களுடைய தற்காலிக கடைகளை அகற்றி விட்டு, பொலிதீன், அட்டைகள், பல கைகள் போன்றவற்றை நகர் முழுவதும் விட்டுச் சென்றுள்ளமையால் இந்த நிலைமைகள் ஏற்பட்டுள்ளது.

நகரத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே குப்பைகள் காணப்படுகின்றன. பொலித்தீன் குப்பைகள் பொது இடங்களில் வீசப்பட்ட நிலையில் உள்ளன.





# முஸ்லிம் தலைமைகளை வேரறுக்க தேசிய மாற்றத்துக்குள் சதித் திட்டம்!

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்!

முஸ்லிம் தலைமைகளை அரசியலில் இருந்து ஓரங்கட்டும் சதி முயற்சிகளில் இருந்து சமூகம் விழிப்படைய வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உலமாக் குழுவின் ஏற்பாட்டில், “சிறுபான்மை பிரதிநிதித்துவமும் உலமாக்களின் பங்களிப்பும்” என்ற கருப்பொருளில், வன்னி மாவட்ட உலமாக்களுக்கான மாநாடு, ஞாயிற்றுக்கிழமை (03) மன்னாரில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் தெரிவித்தவை வருமாறு,


தேசிய மக்கள் சக்தி வென்றுவிட்டது என்பதற்காக, முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை இல்லாதொழிக்க விரும்புகின்றீர்களா? நாடாளுமன்ற அரசியலில், சமூகங்களுக்கென்று தனித்தனி பிரதிநிதித்துவங்கள் அவசியம். தேசிய அரசியலில் மாற்றம் ஏற்பட்டுள்ளமைக்காக, சமூகங்களின் பிரதிநிதித்துவங்களை இல்லாமல் செய்ய இயலாது. எம்மத்தியில் உள்ள சிலர் இவ்வேலைகளைச் செய்வதற்கு துணிந்துள்ளனர். இந்த சதிகளுக்கு துணைபோயுள்ள நமது சகோதரர்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு உலமாக்களுக்கும் உள்ளது.

பிரதிநிதித்துவங்கள் இல்லாத சமூகங்கள், திசை தவறும் ஆபத்துக்களை எதிர்கொள்ளலாம். முறையான தலைமைத்துவங்கள் இருந்தபோதும், உணர்ச்சி, எழுச்சிகள் ஏற்பட்டதால், தமிழ் இளைஞர்கள் தவறான வழி சென்ற வரலாறு நமது நாட்டில் உள்ளது. இதனால், ஏற்பட்ட யுத்தம் சகல சமூகங்களையுமே பாதித்திருந்தன. இதுபோன்ற எழுச்சியை, இப்போது ஏற்பட்டுள்ள மாற்றமும் ஏற்படுத்துமோ என நாங்கள் அஞ்சுகின்றோம்.

புத்தளத்தில், ஒரு முஸ்லிம் எம்.பியும் வரக்கூடாதென்று முஸ்லிம்களையே சதி செய்யத் தூண்டியுள்ளனர். கொழும்பில் முஜிபுர் ரஹ்மான் வரக்கூடாதா? கண்டியில், ரவூப் ஹக்கீம் வென்றால் இவர்களுக்கென்ன பிரச்சினை. வன்னியில், எனது தலைமைத்துவத்தை வேரறுக்கவும் வியூகங்கள் வகுக்கப்படுகின்றன.

தேசிய கட்சிகளின் கைப்பொம்மைகளாக இருக்கப்போகும் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தால் எந்தப் பயனும் ஏற்படாது. சமூகத்துக்கு ஏதாவது கெடுதிகள் அல்லது ஆபத்துக்கள் ஏற்பட்டால், எங்களால்தான் பேச முடியும். எனவே, எமக்கான பிரதிநிதித்துவங்களை நாமே வென்றெடுக்க வேண்டும்.- என்றார்.

# பிரியங்காவுக்கு ஆதரவு தெரிவித்து வயநாடு தொகுதியில் ராகுல் பிரச்சாரம்



இந்தியாவில் தற்போது அரசமைப்பு சட்டத்தை பாதுகாப்பதே பெரும் போராட்டமாக உள்ளது என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

வயநாடு மக்களவை தொகுதியில் போட்டியிடும் தனது சகோதரி பிரியங்கா காந்தியை ஆதரித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்போது, அவர் தெரிவிக்கையில்.

“ நம் நாட்டில் தற்போது அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாப்பதே பெரும் போராட்டமாக உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராகபோராடி பல துன்பங்களை தாங்கி,பல ஆண்டுகள் சிறையில் இருந்தவர்களால் அரசமைப்பு சட்டம் உருவாக்கப்பட்டது. அவர்கள் பணிவு, அன்பு மற்றும் தேசத்தின் மீதான ஆழ்ந்த பாசத்துடன் அரசியலமைப்பை நமக்கு எழுதி வழங்கினார்கள். இது கோபம், வெறுப்பால் உருவாக்கப்பட்டது அல்ல.

தற்போது நாட்டில் நடைபெற்றுவரும் போராட்டம் என்பது அன்புக்கும், வெறுப்புக்கும் இடையிலான சண்டை. நம்பிக்கைக்கும், பாதுகாப்பின்மைக்கும் இடையிலான போராட்டம்.

உங்கள் தொகுதியின் (வயநாடு வேட்பாளர் பிரியங்கா காந்தி இயற்கையில் இரக்க குணம் கொண்டவர். எனது தந்தை ராஜீவ் காந்தி கொலையில் தொடர்புடைய பெண்ணை கட்டித் தழுவியவர் அவர். நளினியை சந்தித்த பிறகு உணர்ச்சிவசப்பட்டு தனது அனுதாபத்தை வெளிப்படுத்தியவர். என்னை பொருத்தவரை இந்தியாவில் செய்யப்பட வேண்டிய அரசியல் இதுபோன்ற அன்பு மற்றும் பாசத்திலான அரசியல் மட்டுமே. வெறுப்பு அரசியல் அல்ல. “ – என்றார்.

# நிலச்சரிவு பேரழிவைக் கூட பா.ஜ.க. அரசியல் ஆக்கியது

## பிரியங்கா காந்தி சாடல்!

அதிகாரத்தில் இருக்க விரும்புபவர்களாலேயே நாட்டில் வெறுப்பும் கோபமும் பரப்பப்படுகிறது என்று வயநாடு தொகுதியில் நடைபெற்ற தேர்ல் பிரச்சாரத்தில் பிரியங்கா காந்தி வதேரா தெரிவித்தார்.

மேலும், மக்களுக்கு மிகுந்த வலியையும் வேதனையையும் ஏற்படுத்திய ஒரு பேரழிவைக் கூட பா.ஜ.க. அரசியலாக்கியது என்று அவர் சாடினார்.

கேரளாவின் வயநாடு மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் பிரியங்கா காந்தி வதேரா நேற்று தொகுதியின் புல்பள்ளி, கெனிச்சிரா, படிச்சிரா, முட்டில் உள்ளிட்ட இடங்களில் தீவிர தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டார். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களை அவர்களின் பணியிடங்களுக்குச் சென்று பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடினார்.

தேர்தல் பிரசாரங்களில் பிரியங்கா காந்தி கருத்து தெரிவிக்கையில்,

“ராகுல் காந்தியும் நானும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் எத்தனையோ பயங்கரமான மற்றும் வேதனையான சம்பவங்களை பார்த்திருக்கிறோம். இருப்பினும், வயநாட்டில் ஏற்பட்ட பேரழிவு எங்களை அதிர்ச்சி அடைய வைத்துவிட்டது. மக்களுக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்திய ஒரு பேரழிவைக் கூட பா.ஜ.க. அரசியலாக்க தவறவில்லை. வயநாடு நிலச்சரிவினால்



பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு போதுமான உதவிகளை வழங்க மத்திய அரசு தவறிவிட்டது. இந்த விவகாரத்தில் உங்களுக்காக உறுதியான குரலை எழுப்புவேன்.

எனது மகளின் வயதுடைய ஒரு பெண்ணையும், முழு குடும்பத்தையும் இழந்த ஒரு பாட்டியையும், தனது நண்பர்கள் அனைவரையும் இழந்த 13 வயது சிறுவனையும் நான் சந்தித்தேன். ஒருவருக்கு ஒருவர் உதவி செய்ய நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்ததை பார்த்து நானும் ராகுலும் வியந்தோம். யார் எந்த மதம் என்று யாரும் கேட்கவில்லை. எல்லோரும் தங்களால் முடிந்ததைச் செய்தார்கள். ஒரு சமூகம் ஒன்று சேர்ந்தால் என்ன சாதிக்க முடியும் என்பது உண்மையிலேயே ஆச்சரியமாக இருக்கிறது. உங்கள் ஒற்றுமை உணர்வு ஒரு பிரகாசமான உதாரணம் ஒவ்வொரு இந்தியரின் பெருமை. மிக முக்கியமாக, நீங்கள் இந்தியாவின் ஒற்றுமைக்கு ஒரு பிரகாசமான உதாரணம்.

இங்கு அழகான கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் உள்ளன. அனைத்து மதத்தினரும் நிம்மதியாக வாழ்கின்றனர். அதிகாரத்தில் இருக்க விரும்புபவர்களால் பரப்பப்படும் வெறுப்பும் கோபமும், நாடு முழுவதும் சூழப்பட்டிருக்கும் நேரத்தில் இந்த குணங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இருப்பினும், இந்த தேசம் உண்மையில் எதற்காக நிற்கிறது என்பதற்கு நீங்கள் உதாரணமாக இருக்கிறீர்கள். இத்தகைய சிறந்த மனிதர்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவேன் என்று நம்புகிறேன்.

நான் வயநாட்டின் பல்வேறு இடங்களுக்குச் சென்றபோது, நீங்கள் தினமும் எதிர்கொள்ளும் எண்ணற்ற பிரச்சினைகள் மற்றும் போராட்டங்களை அறிந்தேன். விலைவாசி உயர்வு, வேலையின்மை, பயனளிக்காத அரசாங்கக் கொள்கைகள், இவை அனைத்தும் உங்கள் வளர்ச்சியைத் தடுக்கின்றன. பணவீக்கம் காரணமாக உங்கள் குழந்தைகளுக்கு கல்வி கற்பது சவாலாக உள்ளது. மேலும், தண்ணீர் தட்டுப்பாடும் உள்ளது. அனைத்து வகையான சுற்றுலாவையும் மேம்படுத்த, வயநாட்டின் அழகை உலகுக்குக் காட்ட உங்களுக்கு வலுவான உள்கட்டமைப்பு தேவை. ” – என்றார்.





# பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஈரானின் முக்கிய ராணுவ தளபதி உயிரிழப்பு

பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஈரானின் முக்கிய இராணுவ தளபதி ஒருவர் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இஸ்ரேலுடனான போர் பதற்றத்திற்கு மத்தியில் ஈரானின் முக்கிய தளபதி உயிரிழந்தமை பெரும் பின்னடைவாகவே பார்க்கப்படுகிறது.

ஈரான் புரட்சிகர பாதுகாப்பு படையின் கமாண்டர் ஹமித் மஜந்தரணிஎன்பவரே உயிரிழந்தவராவார். அவருடன் சேர்ந்து மற்றுமொரு வீரரும் பலியானார்.

நேற்று பாகிஸ்தான் எல்லைக்கு அருகே சக இராணுவ வீரர்களுடன் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். ஆட்டோகைரோவில் (உலங்கு வானூர்தி போன்ற வாகனம்) பறந்துசென்று பயிற்சி மேற்கொண்டபோது, அது விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் கமாண்டர் ஹமித் மற்றும் அவரது பைலட் உயிரிழந்ததாக அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

ரோட்டார் அமைப்பில் உலங்கு வானூர்தியை போன்றது ஆட்டோகைரோ. ஆனால் உலங்கு வானூர்தியைவிட சிறியதாக எளிமையாக இருக்கும். இது ஈரானில் பைலட் பயிற்சி மற்றும் எல்லை கண்காணிப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. இதில் இரண்டு பேர் பயணிக்கலாம்.



# காசா போரை முடிவுக்கு கொண்டு வருவேன்: அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ்

காசா போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என அமெரிக்காவின் தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் உறுதியளித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் மிச்சிகன் மாகாணத்தில் நடந்த இறுதிக் கட்ட பிரசாரத்திலேயே அவர் அதனை குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த வருடம் மிகவும் கடுமையானது. காசாவில் உயிரிழந்த அப்பாவி மக்களின் எண்ணிக்கை கவலையளிக்கிறது.

காசா மற்றும் லெபனானில் அதிகபடியான இடப்பெயர்வு நடந்துள்ளது.

ஒரு அதிபராக நான் எனது அதிகாரத்தை பயன்படுத்தி காசா போரை முடிவுக்கு கொண்டுவர போராடுவேன். பிணைக்கைதிகளை பத்திரமாக மீட்டுக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பேன்.

இஸ்ரேலின் பாதுகாப்பையும், பாலஸ்தீன மக்களின் சுதந்திரத்தையும் உறுதி செய்வேன். இஸ்ரேல் – லெபனான் பிரச்சனையிலும் சுமூக தீர்வை ஏற்படுத்த பாடுபடுவேன்.

அமெரிக்காவில் சாமானிய மக்களுக்கான மருத்துவ செலவீனங்களை குறைத்து அனைவராலும் எளிதில் பெறக்கூடிய குறைந்த செலவின ஹெல்த்கேர் சேவைகள் வழங்கப்படும்.

மூத்த குடிமக்களுக்கான பராமரிப்பு சேவைகளின் செலவினமும் குறிக்கப்படும். உழைக்கும் மக்கள், நடுத்தர வர்க்க குடும்பங்கள், சிறு- குறு தொழில்கள் பாதிக்காத வண்ணம் வரிவிதிப்பு குறைக்கப்படும்.

அத்துடன், குழந்தைப்பேறு, கருக்கலைப்பு சுதந்திரம் உறுதி செய்யப்படும்” என்று அவர் வாக்குறுதி அளித்துள்ளார்.

பக்கங்கள் 03

# கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 05/11/2024

## கனடா தொலைபேசி பயனர்கள் அதிருப்தி

கனடாவில் தொலைபேசி பயனர்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

கனடாவின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்கும் நிறுவனங்களான 03



# கனடா இந்து கோவிலில் பக்தர்கள் மீது காலிஸ்தான் ஆதரவாளர்கள் தாக்குதல்

கனடாவின் பிராம்டன் நகரில் அமைந்துள்ள ஹிந்து மகாசபை கோவிலுக்கு வந்த பக்தர்கள் மீது காலிஸ்தான் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிராம்டனில் உள்ள ஹிந்து மகா சபை கோவிலுக்கு வந்த பக்தர்கள் மீது அங்கு கூடிய காலிஸ்தான் ஆதரவாளர்கள் சிலர் குச்சியால் தாக்கியுள்ளனர்.

கையில் காலிஸ்தான் கொடியுடன் அவர்கள் பக்தர்களை தாக்கும் காணொலி இணையத்தில் வெளியானது.

இந்நிலையில் இந்த சம்பவத்துக்கு கனடா பிரதமர் ட்ரூடோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.





# இந்துக்கள் மீது காலிஸ்தான் பிரிவினைவாதிகள் தாக்குதல்

## பிரதமர் ட்ரூடோ கண்டனம்

கனடாவில் பிராம்டன் பகுதியில் உள்ள இந்துக் கோயிலில் பக்தர்கள் மீது காலிஸ் தான் பிரிவினைவாதிகள் தாக் குதல் நடத்திய நிலையில் அச்சம்பவத் துக்கு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கண் டனம் தெரிவித்துள்ளார்.

“கனடாவின் பிராம்டன் பகுதியில் உள்ள இந்து சபா கோயிலில் நடந்த வன்முறைச் சம்பவங்கள் ஏற்கத்தக்கது அல்ல. கனடா வில் வாழும் ஒவ்வொரு நபருக்கும் அவர்கள் விரும்பும் நம்பிக் கையை சுதந்திரமாக, பாதுகாப்பாக பின்பற்றும் உரிமை இருக் கிறது. இந்தச் சம்பவத்தில் துரிதமாக செயல்பட்டு இந்து சமயத்தினரைப் பாது காத்த காவல்துறைக்குப் பாராட்டுகள்.” என்று பிரதமர் ட்ரூடோ எக்ஸ் சமூகவலை தளத்தில் தெரிவித்துள்ளார். 03



# கனடா வன்முறை சம்பவத்துக்கு இந்தியா கண்டனம்: கோயில்களுக்கு பாதுகாப்பு வேண்டுமென கோரிக்கை

கனடாவின் டொரான்டோ மாகாணத்தின் பிராம்ப்டனில் உள்ள இந்து கோயில் மீது காலிஸ்தான் தீவிரவாதக் குழுவினர் நடத்திய தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும், கடனாவில் உள்ள கோயில்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும் என்று கனடா அரசை இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் நேற்று டில்லியில் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது, கனடாவின் பிராம்ப்டனில் நடந்த வன்முறை தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த ரந்தீர் ஜெய்ஸ்வால்,

“பிராம்ப்டனில் உள்ள இந்து சபா கோயிலில் தீவிரவாதிகள் மற்றும் பிரிவினைவாதிகள் நடத்திய வன்முறைச் செயல்களை நாங்கள் கண்டிக்கிறோம். அனைத்து வழிபாட்டுத் தலங்களும் இதுபோன்ற தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யுமாறு கனடா அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

வன்முறையில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எதிர்பார்க்கிறோம். கனடாவில் உள்ள இந்திய குடிமக்களின் பாதுகாப்பு குறித்து நாங்கள் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளோம்.” என்று தெரிவித்தார்.

இச்சம்பவம் கனடா மற்றும் வெளிநாடுகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து, மத சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“பிராம்டனில் உள்ள இந்து சபா கோயிலில் நடந்த வன்முறைச் செயல்கள் ஏற்றுக்கொள்ள முடியா தவை. ஒவ்வொரு கனேடியர்களும் தங்கள் நம்பிக்கையை சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் கடைப்பிடிக்க உரிமை உண்டு. பிராந்திய காவல் துறையின் விரைவான நடவடிக்கைக்கு நன்றி.” என்று தெரிவித்துள்ளார்.

இந்த வன்முறையை கண்டித்துள்ள

D2

கனடா எதிர்க்கட்சித் தலைவர் பியர்ரே போலிவ்ரே, “இது முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது” என்று கூறினார்.

கனடா நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரா ஆர்யா, “இந்தச் சம்பவம் மிகவும் ஆபத்தானது. காலிஸ்தானி தீவிரவாதிகள் தங்களுக்கான எல்லையை கடந்துவிட்டார்கள்” என்று குறிப்பிட்டார்.

டொரான்டோ நாடாளுமன்ற உறுப்பினர் கெவின் வூங், “தீவிரவாதிகளுக்கு பாதுகாப்பான இடமாக கனடா மாறியுள்ளது” என்று கவலை தெரிவித்தார்.

இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் யூத கனேடியர்களை தீவிரவாத வன்முறையிலிருந்து பாதுகாக்க அரசு தவறிவிட்டதாக கனடா தலைவர்கள் பலரும் விமர்சித்துள்ளனர்.

இதனிடையே, இந்து கோயில் தாக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து கோயில் முன்பாக ஏராளமான இந்துக்கள் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்துக்களையும் இந்துக்களின் வழிபாட்டுத் தலங்களையும் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

# கனடாவில் 4 ஆண்டுகள் போலியாக தாதிப் பணியில் ஈடுபட்ட பெண் கைது

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் நான்கு ஆண்டுகள் போலியாக தாதியாக கடமையாற்றிய பெண் ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மேற்படி பெண், தம்மை தாதியாக அடையாளப்படுத்தி வேலை செய்துள்ளார்.

சிம்கோவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. 33 வயதான ஹாய்லி ரொபர்ட்ஸ் என்ற பெண் இவ்வாறு மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இவர் டைனி டவுன்ஷிப் பகுதி சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பெண் கடந்த 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையிலான காலப்பகுதியில் பல்வேறு சுகாதார

C3





## கனடா தொலைபேசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரொஜர்ஸ், பெல் மற்றும் டெலோஸ் ஆகிய நிறுவனங்கள் கட்டணங்களை அதிகரித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையில் சேவையை வழங்கி வரும் இந்த நிறுவனங்கள் திடீரென கட்டண அதிகரிப்பை மேற்கொண்டு உள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மாதாந்த இணையம், தொலைக்காட்சி மற்றும் வீட்டு தொலைபேசிகளுக்கான கட்டணங்கள் எதிர்பாராத அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொதுமக்கள் நூற்றுக்கணக்கான மின்னஞ்சல்களை அனுப்பி முறைப்பாடு செய்துள்ளனர்.

பிரதான சேவை வழங்கும் நிறுவனங்களினால் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்ட போதிலும் இவை எவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது குறித்து தங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என வாடிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பெரும் எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்கள் இந்த கட்டண அதிக அதிகரிப்பு குறித்து தங்களது கடும் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளியிட்டுள்ளனர்.

## இந்துக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிராம்டன் கோயிலில் நடந்த தாக்குதலுக்கு இந்து கனடியன் ஃப்வுண்டேஷன் கண்டனம் தெரிவித்துள்ளது. கோயிலில் தாக்குதல் நடந்தபோது பெண்கள், குழந்தைகள் இருந்தனர். ஏதேனும் அசம்பாவிதம் நடந்திருந்தால் என்ன செய்திருக்க முடியும் என்று அரசுக்கு கேள்வி எழுப்பியுள்ளது.

கோயிலில் தாக்குதல் நடத்தியவர்கள் காலிஸ்தான் ஆதரவு கொடிகளை ஏந்தியிருந்தனர். தாக்குதலுக்கு முன்னதாக அவர்கள் 1984 சீக்கிய கலவரத்தைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். திடீரென அவர்கள் இந்துக் கோயிலில் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து பீல் பிராந்திய காவல்துறை தலைவர் நிஷான் துரையப்பா கருத்து தெரிவிக்கையில்,

“கோயில் தாக்குதலால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. அதனைத் தணிக்க கூடுதல் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். அமைதியான வழியில் போராட எல்லோருக்கும் உரிமை உண்டு. ஆனால் இதுபோன்ற வன்முறை, கிரிமினல் செயல்களை பொறுத்துக் கொள்ள மாட்டோம். இந்த வன்முறைத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள்.” - என்றார்.

இந்நிலையில் இந்தச் சம்பவத்துக்கு இந்தியாவும் கண்டனம் தெரிவித்துள்ளது.

“இந்துக் கோயிலில் பக்தர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம். இது போன்ற வழக்கமான நிகழ்வுகளுக்கு கனடா அரசு முன்னேற்பாடாக கூடுதல் பாதுகாப்பு அம்சங்களை ஏற்படுத்தியிருக்க வேண்டும்” என்று கூறியுள்ளது.

இந்தியாவில் சீக்கியர்களுக்கு தனி நாடு வேண்டும் எனக் கோரி காலிஸ்தான் உள்ளிட்ட சில பிரிவினைவாத இயக்கங்கள் வெளிநாடுகளில் செயல்பட்டு வருகின்றன. இந்த சூழலில் கனடா நாட்டில் வசித்து வந்த பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கடந்த ஆண்டு ஜூன் மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார். இதில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியிருந்தார். இதை இந்தியா மறுத்தது.

கனடாவின் குற்றச்சாட்டு குறித்து கடந்த மே மாதம் பதில்அளித்த மத்திய வெளியுறவு துறை அமைச்சர் ஜெய் சங்கர்,

“ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்தியாமீது குற்றம் சுமத்தும் கனடா அரசு, அதற்கான எந்த ஆதாரத்தையும் வழங்கவில்லை. கனடாவின் உள்நாட்டு அரசியல் காரணமாகவே ஹர்தீப் சிங் கொலை செய்யப்பட்டிருப்பார். அவரது கொலைக்கும் இந்தியாவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

காலிஸ்தான் ஆதரவாளர்களில் சில பிரிவினர் கனடாவில் தங்களுக்கான வாக்கு வங்கியை உருவாக்கியுள்ளனர். தற்போது ஆட்சியில் இருக்கும் அரசுக்கு பெரும்பான்மை பலம் இல்லை. தவிர, சிலகட்சிகளும் காலிஸ்தான் ஆதரவுதலைவர்களை சார்ந்து இருக்கின்றன. இந்த சூழலில் வாக்கு வங்கியைகுறிவைத்தே நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்தியா மீது கனடா குற்றம்சாட்டுகிறது.” என தெரிவித்திருந்தார்.

## கனடாவில்...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்களில் தாதியாக கடமையாக்கியுள்ளார்.

இந்தப் பெண் போலி ஆவணங்களை பயன்படுத்தி பணியில் இணைந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. மேற்படி பெண்ணுக்கு எதிராக 19 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.